கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **162/2020**

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 **மன்னர் மன்னன்** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 01.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாணை</u>

1. பி.சா.ஆ.2 ஆவணத்தை எனது எதிர் வழக்குரையில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ–2 ஆவணம் எனது கையில் எவ்வளவு நாட்களாக உள்ளது என்றால் எனது கைவசம் இல்லை. நான் வேறொரு நபருக்கு ஒத்திக்கு விட்டிருந்தேன். அவரது கைவசம் இருந்தது. மேற்படி ஒத்தியை திருப்பிவிட்டேனா என்றால்இல்லை. எவ்வாறு பி.சா.ஆ.2 ன் அசல் எனது கைவசம் வந்தது என்றால் நான் கேட்டதற்கிணங்க மேற்படி நபர் என்னிடம் கொடுத்தார். மேற்படி ஒத்தி எந்த வருடம் ஏற்பட்டது என்றால் கடந்த 2019 ம் வருடம் ஏற்பட்டது.

2. எனது அனுபவத்தை அவரிடம் கொடுத்து பணம் பெற்று மேற்படி ஒத்தி ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். இந்த அசல் வழக்கானது கடந்த 2020 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2019 ம் வருடமே மேற்படி சொத்தை ஒத்திக்கு வைத்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு முதல் தாவா சொத்தில் நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். ஒத்தி பெற்றவர் தான் அனுபவம் செய்து வருகிறார். மேற்படி ஒத்திக்கு பெற்றவர் பெயர் என்ன என்றால் காளிதாஸ் ஆகும். மேற்படி காளிதாஸ் என்பவரிடம் சொத்தின் அனுபவத்தை கொடுத்துவிட்ட விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் என்னிடம் கேட்காததால் நான் சொல்லவில்லை.

3. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் உள்ளேனா என்றால் தற்போது இல்லை. ஒத்தி பெற்றவர் தான் தற்போது தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார். பி.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எனது வழக்கறிஞரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காளிதாஸ் தான் சொத்தை அனுபவம் செய்கிறார் என்றும், அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். காளிதாஸ் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார். பி.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

4. உண்மையிலேயே பி.சா.ஆ.2 ஆவணம் இருந்திருந்தால் எனது எதிர்

வழக்குரையிலும், எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லிருப்பேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் பதிவு செய்ய தேவையில்லை என்பதால் பதிவு செய்யவில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்தால் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணம் என்று தெரிந்துவிடும் என்பதால் பி.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்யாமல் தற்சமயம் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு அரசால் இனமாக கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

5. எதன் அடிப்படையில் வாதிக்கு அரசால் இனமாக வழங்கப்பட்டது இல்லை என்று சொல்கிறேன் என்றால் எனது தந்தை வாங்கிய நிலமாகும். தாவா சொத்திற்கு வாதிக்கு மூல பத்திரம் உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து பஞ்சமி நிலம் என்றும், வாதியின் சேவைக்காக கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் வாங்கியதே தவறு என்றும், அதை தொடர்ந்து பி.சா.ஆ.2 ஒத்தி பத்திரம் ஏற்படுத்தியதும் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசாங்கத்திறகு பாத்தியப்பட்ட நிலம் என்றும், என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் எதுவும் என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

6. பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.6 இரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், எனவே அவை ஏற்றுக்கெள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட ஆவணம் என்றால் ஒவ்வொரு ஆண்டிற்கும் நான் தான் வாங்கியுள்ளேன். வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நானும், கிராம நிர்வாக அலுவலர், காளிதாஸ் ஆகியோபர் சேர்ந்து கூட்டாக வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல.

7. 2005 ம் வருடம் எனது தந்தை தாவா சொத்தை கிரையம் பெற்றது தவறு என்று ஒப்புக்கொண்டு வாதிக்கு தாவா சொத்தின் சுவாதினத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லாததால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எதுவும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**